★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ [illegible]

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 26உ வியாழன் (11—10—56) ★ ★ வெளியீடு: புரட்டாசி 27உ வெள்ளி (12—10—56) [இதழ் 105

தமிழ்நாடு காங்கிரசார் கவனத்திற்கு!

மங்களூர், அக். 10—

"மைசூர் மாநிலத் தலைவர்களும், தென் கன்னட மாவட்டத்தைச்சேர்ந்த சட்டசபை உறுப்பினர்களும் காசர்கோடு தாலுகாவின் வட பகுதியை மைசூருடன் இணைத்துவிடப் பெரிதும் முயற்சித்தனர்; ஆனால் அவர்களால் அது முடியாது போயிற்று; என்றாலும், இன்னும் பத்து ஆண்டுகளுக்குள் காசர்கோடு தாலுகாவைப் பெற நாம் எல்லா சட்டரீதியான வழிகளிலும் முயற்சிப்போம்" என்று மைசூர் பிரதேச காங்கிரஸ் தலைவர் எஸ். சென்னையா கூறியிருக்கிறார்.

இந்தியைத் திணிக்கும்

டில்லி ஏகாதிபத்யத்திற்கு எதிராக ஆச்சாரியார் போர்க்கோலம்!

வெறி கொண்ட வடவருக்கு எச்சரிக்கை

'நீதி—நேர்மை வழி தவறிய எந்த சர்க்காரும் நீடிக்க முடியாது'

'இந்தியை மட்டும் அரசாங்க மொழியாக்குவது அநியாயம்—அக்கிரமம்—கொடுங்கோன்மை'

தமிழ் மக்களை ஆர்த்தெழுமாறு அறைகூவுகிறார் ஆச்சாரியார்

சென்னை, அக். 10—

இந்தியை மட்டுமே இந்தியாவின் அரசாங்க மொழியாக்குவோம் என்று வெறிகொண்ட நிலையில் அவசர அவசரமான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் டெல்லி ஏகாதிபத்தியத்தின் மூலவர்களான வடவர்களுக்கு எதிராக ஆச்சாரியார் போர்க்கோலம் பூண்டிருக்கிறார்.

'இந்தியைத் திணிப்பது அநீதியானது—அக்கிரமமானது' என்று அவர் கூறியிருப்பதுடன், 'தமிழர்கள் அனைவரும் பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இத்தித் திணிப்பை எதிர்க்க வேண்டும்' என்றும் அறைகூவி அழைத்திருக்கிறார்

'நீதி, நேர்மை வழி நடக்காவிட்டால், எந்த ஒரு சர்க்காரும்—அது எவ்வளவுதான் பலம் பொருந்தியதாயிருந்தாலும்—நீண்ட நாளைக்கு அதிகாரத்திலிருக்க முடியாது' என்று, தனது அதிகாரப் பலத்தால் இந்தியைத் திணிக்கும் டெல்லிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார், ஆச்சாரியார்!

அண்மையில் இந்தி பற்றி அவர் மதுரையருகே தெரிவித்த கருத்துக்களை மேலும் விளக்கிக் கூறியுள்ளதாவது:—

"இந்திய யூனியனின் ஒரே அரசாங்க மொழியாக இந்தியை மட்டும் திணிப்பதானது, 'ஒரு ஜனநாயக அமைப்பில் பாரபட்சம் கூடாது' என்ற அடிப்படையானதோர் சட்டத்தை மீறுவதாகும். மேலும், அம்மாதிரிச் செய்வது, ஒரு முழு மக்கள் கூட்டத்தை இரண்டாந்தரத் தாழ்வான நிலைக்குத் துரத்துவதாகும்.

"இந்தி மட்டுமே இந்திய யூனியன் அரசாங்க மொழியெனச் சாற்றும் எந்த ஒரு சட்டமும், இந்திய யூனியனில் அங்கம் வகிக்கிற இதர எல்லா மொழி பேசும் மக்களையும் ஒரு தாழ்வான நிலைக்குக் கொண்டு செல்வதாகும். இது அநீதியானது; நேர்மையற்றது.

"இந்திய யூனியனில் உள்ள 10 அல்லது 12 பெரும் மொழிகளையும் அரசாங்க மொழிகளாக்குவது இயலாததுதான்; எனவே, நமக்குள்ள ஒரேவழி ஆங்கிலத்தையும், இந்தியுடன் சேர்த்து அரசாங்கமொழியாக்க வேண்டுமெனக் கோருவதுதான்.

"பொதுவாக எல்லா இந்தி பேசாத மக்களும்—குறிப்பாகத் தமிழ் மக்களும் டில்லிக்கு இதனைத் தெளிவாக உணர்த்தவேண்டும்; இதைச் செய்யாவிட்டால், நாங்கள் அதிருப்தியடைவோம்,' என்று எடுத்துரைக்க வேண்டும்.

"இந்த எச்சரிக்கையை உறுதியான குரலில் நாம் தருவோமேயானால், டில்லி அதிகாரபீடத்தில் வீற்றிருப்பவர்கள்—அவர்கள் எல்லோரும் நாட்டுப்பற்று மிக்கவர்கள் — நிச்சயமாக நமது கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுவார்கள். எனவே, டில்லியிலிருப்பவர்களுக்கு நமது நிலையை உணர்த்த நாம் தவறிவிட்டால், அவர்கள் தவறிழைக்கக் காரணமானவர்களாகிவிடுவோம். அச்சத்தாலோ, சோம்பேறித்தனத்தாலோ அல்லது வேறெக்காரணங்களினாலோ நாம் இதனைச் செய்யத் தவறிவிட்டால், டில்லியிலிருப்பவர்கள் தவறு இழைப்பதைத் தடுக்க முடியாது."

சென்னை கலைக் கல்லூரி மாணவர்களிடை 'மொழிப் பிரச்சினை'

(4-ம் பக்கம் பார்க்க)

உலகிலேயே மிகப் பெரிய ரொக்கக் கொள்ளை

பாஸ்டன், அக். 10—

12,19,000 டாலர் (ரூ. 58,02,440) களை ரொக்கமாகக் கொள்ளையடித்த எட்டுபேர்களுக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை வழங்கியிருக்கிறது அமெரிக்க நீதி மன்றம் ஒன்று!

உலகிலேயே ரொக்கமாகக் கொள்ளையடிக்கப்பட்டதில் இந்தத் தொகைதான் மிகப் பெரியதாம். பிரிங்க்ஸ் ஆயுத மோட்டார் கிறுவனத்திலிருந்து இந்தத் தொகை கொள்ளையடிக்கப்பட்டதாம்.

1950-ம் ஆண்டு ஜனவரி 17-ல் நடத்திய இந்தக் கொள்ளைக்கு, 1948-ம் ஆண்டிலிருந்து இந்தக் கொள்ளையர்கள் சதித் திட்டம் தீட்டி வந்தனராம்.

இவர்களில் ஏழுபேர், முகமூடி அணிந்துகொண்டு ஆயுதந்தரித்து, சம்பவத்தன்று இரவு கிறுவனத்திற்குள் புகுந்து ஒருமுறைகூட துப்பாக்கிக் குண்டுகளை உபயோகிக்காமல் கொள்ளையை நடத்திவிட்டுத் தப்பிவிட்டனராம்.

அந்த கிறுவனத்தின் பொருளாளர் ரொக்கப் பணத்தை எண்ணுகிறபோதெல்லாம், தூரவிருந்தே டெலஸ்கோப், பைனாகுலர் கருவிகளைக்கொண்டு உற்றுக் கவனித்து இந்தக் கொள்ளைக்கான திட்டங்களை வகுத்தனராம்.

கொள்ளையில் ஏழுபேர் ஈடுபட்டனர் என்றும், எட்டாவது நபர் இவர்களை இயக்குவித்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

வடக்கில் நில நடுக்கம்

கட்டிடங்கள் கடுமையாகக் குலுங்கினவாம்

புதுடில்லி, அக். 10—

வடஇந்தியாவில் உள்ள டில்லி, அம்பாலா, ஜெய்ப்பூர், சந்திகார், பாட்டியாலா ஆகிய பகுதிகளில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது.

டில்லியில் நில நடுக்கம் மிகக் கடுமையாகவேயிருந்ததாம்.

நில நடுக்கத்துடன் 'உறுமல்' சப்தமும் இருந்ததாம். பல இடங்களில் மக்கள், பாதுகாப்புக்காக வீடுகளிலிருந்து வெளியே ஓடினராம்! கட்டிடங்கள் கடுமையாகக் குலுங்கினவாம்!

இதுவரை இவ்வளவு பயங்கரமான நிலநடுக்கம் ஏற்பட்டதில்லை என்று கருதப்படுகிறது. இது சென்ற வாரத்தில் மட்டும் டில்லியில் ஏற்பட்ட இரண்டாவது நில நடுக்கமாகும். இதனால் இரண்டு வீடுகள் இடிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

அறியாமையே அமைதிக்கு வழிகாட்டியாம்

பண்டித நேரு கருதுகிறார்

புதுடில்லி, அக். 8—

"அதிர்ஷ்டவசமாகவோ, துரதிர்ஷ்டவசமாகவோ, இந்தியாவில் உள்ள அநேகர் செய்தித்தாள்களைப் படிப்பதில்லை; ஆகவேதான், முன்னேற்றமடைந்த நாடுகள் என்று கூறப்படும் நாடுகளிலுள்ள மக்களைவிட அமைதியான வாழ்க்கையை இங்கு நடத்துகிறார்கள்" என்று பண்டித நேரு, பத்திரிகையாளர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சீனப் பிரதமர் வருகை

இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவார்

புதுடில்லி, அக். 10—

நவம்பர் மாதக் கடைசியில் சீனப் பிரதமர் சூ-என்-லாய் இந்தியாவுக்கு வருகிறார். இரண்டு அல்லது மூன்று வாரங்கள் இங்கு தங்கியிருந்து, இந்தியாவின் அபிவிருத்தித் திட்டப் பகுதிகளை அவர் பார்வையிடுவாராம்.

சர்க்காரைக் கவிழ்க்கும் வேலையில் ஈடுபட்டதாக...!

150 சீன மாணவர்களுக்குச் சீட்டு

சிங்கப்பூர், அக். 10—

சர்க்காரைக் கவிழ்ப்பதற்கான வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கூறி, சிங்கப்பூர் நகரில் உள்ள சீனப் பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 150 மாணவர்களையும், இரு ஆசிரியர்களையும் பள்ளியிலிருந்து நீக்கியிருப்பதாக, அப்பள்ளிகளின் தலைமையாசிரியர்களைக் கூட்டிவைத்து, சிங்கப்பூர் கல்வி மந்திரி சேவ்ஸ்வீக் என்பார் தெரிவித்திருக்கிறார்.

பள்ளிகளின் ஒழுங்கு முறைகளையும், விதிகளையும் மீறியதாக மூன்று மாணவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாயும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'சில ஆசிரியர்கள் உட்பட மேலும் பலர், இதைவிடக் கொடிய குற்றம் புரிந்திருக்கின்றனர் என்றும், அவர்கள் எல்லோரையும் தான் எச்சரிப்பதாகவும் அந்த மந்திரி கூறியிருக்கிறார்.

★

3 பள்ளிகளை மாணவர் கைப்பற்றினர்

மூன்று மாணவர்கள் கைது செய்யப்பட்டது; சீன இடைநிலைப் பள்ளி மாணவர் சங்கத்தைக் கலைத்தது; தொடர்ந்து சுமார் 150 மாணவர்களையும் இரு ஆசிரியர்களையும் பள்ளிகளிலிருந்து நீக்கியது—ஆகிய சர்க்காரின் நடவடிக்கைகளை எதிர்த்துச் சுமார் 5,000 மாணவர்கள், மூன்று சீன உயர்நிலைப் பள்ளிகளைக் 'கைப்பற்றி'க் கொண்டனர் என்றும், இவர்கள் இரவெல்லாம்கூட பள்ளிகளை விட்டு வரவில்லை என்றும், பள்ளி நிர்வாகத்தையும், பாதுகாப்பையும் இம்மாணவர்களே ஏற்றுக்கொண்டிருப்பதாயும் செய்தி ஒன்று கூறுகிறது.

மாணவர்களே பள்ளிகளின் வாயில்களில் நின்று கொண்டு காவல் புரிந்து வருவதாயும், அவ்வழியே போவோர் வருவோர் எல்லோரையும் அவர்கள் 'சோதனை'யிட்டு அனுப்புவதாகவும், மாணவர் சிலரின் பெற்றோர்களைக்கூட தங்கள் பிள்ளைகளைப் பார்க்க அனுமதிக்க மறுத்துவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

'பலாத்காரத்தைப் பலாத்காரம் கொண்டே எதிர்ப்போம்; சர்க்கார் மாணவர்கள்மீது கோரமாகவே நடவடிக்கை எடுக்கத் துணிந்துவிட்டனர்' என்று, ஒரு மாணவர் தலைவர் கூறினாராம்.

மாணவர் சங்கத்தைக் கலைத்ததை எதிர்த்தும், மாணவர் தலைவரைக் கைது செய்ததை எதிர்த்தும் சீன மாணவர்கள், இந்த வெள்ளியன்று கண்டன ஊர்வலம் ஒன்று நடத்தவும், சர்க்கார் மாளிகையை 'முற்றுகை'யிடவும் எண்ணியிருந்ததாகவும், அதனை ஒட்டியே பலரும் கைது செய்யப்படுகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

வடக்கெல்லை மீட்புக் கிளர்ச்சி

ஆந்திர மாநிலத்தில் எதிரொலி

சர்க்கார் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யுமாம்

கர்னூல், அக். 10—

வரும் அக்டோபர் 15-ந் தேதியன்று, தமிழ் மாநிலம் எங்கும் வடக்கு எல்லை மீட்புக்காகக் கிளர்ச்சி நடத்தப்போவதாகத் தமிழரசுக் கழகத்தவர் அறிவித்துள்ளனர் அல்லவா? அந்த அறிவிப்பின் எதிரொலி ஆந்திராவில் கேட்டிருக்கிறது.

"தமிழ் நாட்டிலும், ஆந்திராவில் உள்ள தமிழ் நாட்டின் எல்லைப் பகுதிகளிலும், தமிழரசுக் கழகத்தவர் கிளர்ச்சி நடத்தப்போவதாக அறிவித்திருப்பதை ஒட்டி ஆந்திர சர்க்கார், எல்லைப் பிரதேசங்களில் வழக்கமாகச் செய்யப்படும் எல்லா பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும்,"

என்று, ஆந்திர சர்க்கார் அதிகாரி ஒருவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறாராம்.

நம் நாடு

சென்னை • 11—10—'56 வியாழன்

தாக்குதல்மேல்தாக்குதல்

★

நெசவாலைகளின் போட்டியைத் தாங்கிக்கொள்ள முடியாமல், திராவிடத்தின் சிறந்த ஒரே கைத்தொழிலாக உள்ள கைத்தறித் துறை நாளடைவில் நசித்துக்கொண்டு வருகிறது. அவ்வாறு அறவே நசித்து வருவதிலிருந்து கைத்தறித் துறையைக் காப்பாற்றுவது என்ற முயற்சியில், குறைமனதுடன் காங்கிரஸ் ஆளவந்தார்கள் ஈடுபட்டுள்ளனர். குறிப்பிட்ட ரகத் துணிகளை உற்பத்தி செய்யக்கூடாது என ஆலைகளுக்குத் தடை விதித்து, கைத்தறித் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனச் சென்னை சட்டசபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. கைத்தறித் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதில் இருதயசுத்தமான எண்ணம் இருந்திருக்குமானால், அத்தீர்மானத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு ஆலைகளுக்குத் தடைவிதிக்க இந்தியப் பேரரசு முன்வந்திருக்க வேண்டும். ஆனால் இந்தியப் பேரரசோ, கைத்தறித் தொழிலுக்குப் பாதுகாப்பு தரத்தக்க ஆற்றலுடைய அத்தீர்மானத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு, வேண்டாவெறுப்பாகக் கைத்தறித் துறைக்கு உயிரூட்டுவதில் முனைந்தது.

அத்தகு முனைப்பினால் கைத்தறித் தொழிலுக்கு ஏதோ தற்காலிகமான ஆக்கம் ஏற்பட்டு இருக்கிறது எனச் சொல்லக் கூடுமே அல்லாது வேறு சொல்வதற்கில்லை.

அப்பொழுதுக்கப்பொழுது ஏற்படக்கூடிய போட்டிகளை எதிர்த்து நின்று தன் பலத்தினால் வளம் பெற்று நிலையாக வாழக்கூடிய வன்மை, இந்தியப் பேரரசு அளித்துவரும் உதவியினால் கைத்தறித் துறைக்கு என்றும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. உதவி செய்யப்படுகிறவரை கைத்தறித் துறை வாழும்; உதவி நிறுத்தப்பட்டால் அத்தொழில் சாகும் என்ற ரீதியில்தான் இந்தியப் பேரரசு செய்துவரும் உதவியின் உள்ளடக்கம் இருந்து வருகிறது. இந்த உள்ளடக்கத்தை நன்கு தெளிவாகத் தெரிந்துகொண்டுதான், கைநெசவுத் தொழிலுக்கு இந்தியப் பேரரசும் அத்தகைய நீடித்த பயன் தர முடியாத உதவியைச் செய்துவருகிறது. நிற்க,

'திருமணம் செய்தும் துறவி-கடன்பட்டும் பட்டினி' என்ற மொழிக்கொப்ப, இந்தியப் பேரரசின் உதவியும் மாகாண ஆட்சியின் உதவியும் பெற்றுங்கூட தன் காலால் நிற்கக்கூடிய வன்மை பெறாது, நிலையற்ற வாழ்வு வாழ்ந்துவரும் கைத்தறித் துறைக்கு மற்றொரு பேராபத்தையும் தேடுவதற்கு இந்தியப் பேரரசு துணிந்து நிற்கிறது. விசைத்தறித் திணிப்புக் கோட்பாடுதான் அந்தப் பேராபத்தாகும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முடிவதற்குள்ளாக இத்துணைக்கண்ட மக்களின் துணித் தேவை இப்பொழுது இருப்பதைவிட அதிகமாகப் பெருகிவிடும் என்றும், எதிர்பார்க்கப்படுகின்ற தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் துணி உற்பத்தியைக் கூட்டுவது கட்டாயமாகிறது என்றும், அதற்காக விசைத்தறித் திணிப்பு இன்றியமையாதது என்றும், உறுதிப்பாடற்ற ஒன்றைக் கருதி இந்தியப் பேரரசு, குற்றுயிராய்க் கிடக்கும் கைநெசவுத் தொழிலை முற்றுயிரற்ற தாக்கும் பாதகத் தொழிலை மேற்கொண்டு இருக்கிறது.

விசைத்தறியின் விபரீத விளைவுகள் குறித்து, தத்துவ ரீதியாகவும் புள்ளிவிவர ரீதியாகவும் தக்க காரணங்களைக் காட்டி வாதிட்டாலும், தனது பிடிவாதத்தை, அதாவது விசைத்தறித் திணிப்பு முடிவை மாற்றிக்கொள்ள இந்தியப் பேரரசு உடன்பட மறுக்கிறது. ஏதோ பொருத்தமற்றப் பசப்பு மொழிகளைப் பகட்டாகப் பேசி வருகிறது அவ்வரசு.

தாக்குதல்மேல் தாக்கலைத் தாங்கிக்கொண்டு தத்தளித்துக்கொண்டு இருந்துவரும் கைத்தறித் துறைக்கு, இப்பொழுது வங்கத்திலிருந்து புதிய தாக்குதல், விற்பனைவரி விதிப்பு மூலம் கிளம்பி இருக்கிறது.

கைத்தறித் துணிகளுக்கு விற்பனை வரி விலக்குச் சலுகை அளிப்பது என்ற இந்தியப் பேரரசின் கொள்கைக்கு இணங்க, கடந்த பதினைந்தாண்டுக்காலமாகத் திராவிடத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் கை நெசவுத் துணிகளுக்கு விற்பனை வரி விலக்கு அளித்து வந்திருக்கிறது மேல் வங்க அரசாங்கம். ஆனால் இப்பொழுது, அந்த நாட்பட்ட சலுகையை விலக்கிவிட்டு, ரூபாய்க்கு முக்காலணா விதம் விற்பனை வரி விதிக்கத் துணிந்துவிட்டது அவ்வங்க ஆட்சி.

இதனால், அங்கு விற்பனையாகிவந்த நான்கு கோடி மதிப்புடைய தமிழகக் கைநெசவுத் துணிக்கு ஆபத்து ஏற்பட்டு இருக்கிறது. அந்த அளவிற்கு இங்கு கைநெசவாளர்களும் பாதிக்கப்படுவர் என்பது எதிர்பார்க்கக்கூடியதேயாகும்.

ஏற்கனவே, மரவள்ளிக் கிழங்கிலிருந்து உருவாக்கப்படும்சவ்வரிசியைவங்காளத்தில் விற்கக்கூடாது என வங்காள அரசாங்கம் தடை விதித்ததும், அதன் பலனாகத் தமிழகத்தில் அத்தொழிலில் நெருக்கடி ஏற்பட்டதும், இந்த நேரத்தில் கருதத்தக்கதாகும்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து இவ்வாண்டு ஏப்ரல் மாத இறுதி வரையில், தமிழகக் கைநெசவுத் துணிக்குப் போடாது இருந்த விற்பனை வரியை, இப்பொழுது மட்டும் போட்டுத் தீருவது என்ற முடிவிற்கு ஏன் வங்காள அரசாங்கம் முன் வந்ததோ? தமிழக நெசவாளர்கள்மீது வங்காள ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்ட சீற்றம்தான் என்னவோ?

தாக்குதல்மேல் தாக்குதல் நம் திராவிடக் கை நெசவுத் துறைக்குக் கிடைத்தவண்ணம் இருக்கிறது. என்று இத்தாக்குதல்களுக்கு இடமில்லாது ஆக்கப்படுகிறதோ, அன்றுதான், நமது கைநெசவுத் தொழில் வளர்ந்தோங்கும்.

டில்லி ஆட்சியின் பரந்த மனப்பான்மை!

இந்தியாவின் தொழில் முக்கியத்துவம் பெற்ற நகரங்களில் விரிவான அளவில் நிறுவனங்கள் அமைத்து, நவீன இயந்திரங்கள் பற்றியத் தொழில் நுணுக்கங்களைக் கற்றுத்தர இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளதாம்.

சிறு தொழில் சம்பந்தமாகப் பரிசோதனைச் சாலைகளும் அமைக்கப்படுமாம்.

விளையாட்டுப் போட்டிகளுக்கான சாதனங்கள் குறித்து கற்றுத்தர ஜலந்தர்—மீரத்திலும், விஞ்ஞானத் துறைக்கான கண்ணாடிக் கருவிகள் சம்பந்தமாக அம்பாலாவிலும், விவசாயக் கருவிகளைக் குறித்து பாடியாலாவிலும், கண்ணாடி வளையல் முதலியவைகளுக்கு பெரோசாபாத்திலும், சர்வே கருவிகளுக்காக ரூர்கியிலும், சைக்கிள் சாமான்களுக்காகக் கான்பூரிலும், கோப்பைகளுக்காக கானுபூரிலும் நிறுவனங்கள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

காலணிகளான செருப்பு போன்றவைகளுக்கு மட்டும் தென்னாட்டில்—திருச்சூரில் நிறுவனம் ஏற்படுத்த டில்லி முடிவு செய்துள்ளதாம்.

மேலும் பல நிறுவனங்கள் பல முக்கிய நகரங்களில் ஏற்படுத்தப்படுமாம்.

10 கோடி மக்கள் உரிமை உள்ளவர்கள்!

அமெரிக்கத் தேர்தலில் 'ஓட்' அளிப்போர் நிலை பற்றித் தகவல்

வாஷிங்டன்—

நவம்பர் 6-ந் தேதி நடைபெறவிருக்கும் தேர்தல்களில் 10,27,43,000 அமெரிக்க மக்கள் 'வாக்கு' அளிப்பார்களாம்!

1952-ல் வாக்குரிமை பெற்றவர்களைவிட இது 40 இலட்சம் அதிகமாம்; முதன்முதலாக ஓட்டுரிமை பெற்ற 75 இலட்சம் இளைஞர்களும், யுவதிகளும் இதில் உட்படுவார்கள்.

1952-ல், ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட மொத்த 'ஓட்'டுகளின் எண்ணிக்கை 615 இலட்சமாகும்.

அகதிகளுக்கு வாக்குரிமை

தேர்தல் குழு அறிவிப்பு

புதுடில்லி, அக். 10—

'இந்தியாவுக்கு வந்துள்ள அகதிகள், 'இந்திய குடிமக்களாகப் பதிவு செய்துகொண்டால் அவர்களை வாக்காளர்களாக்குவது பற்றி, தாமாகவே வாக்காளர் பதிவு அதிகாரிகள் கவனித்துக்கொள்வார்கள்,' என்று இந்தியத் தேர்தல் குழு அறிவித்துள்ளது.

'செயற்கை முறை கட்டுப்பாடு கூடாது'

பம்பாய் அரசாங்கத்தின் கொள்கை பற்றி அமைச்சர்

பம்பாய், அக். 9—

குடும்பக் கட்டுப்பாட்டிற்காகச் செயற்கை முறையில் சில விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு கட்டுப்படுத்தும் முறையை பம்பாய் அரசாங்கம் ஆதரிக்கவில்லை என்றும், சமுதாய நலனுக்காகப் பாடுபடும் நிறுவனங்கள் இது குறித்து மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும் என்றும் பம்பாய் அரசாங்க சுகாதார அமைச்சர் ஜத்தி கூறியுள்ளார்.

14,000 பட்டு நெசவுத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

கும்பகோணம், அக். 9—

பட்டு நெசவுத் தொழிலாளர்கள், தங்களின் சம்பளம் - போனஸ் பற்றிய கோரிக்கைகளுக்கு, முதலாளிகள் 15 நாட்களுக்குள் இணங்காவிட்டால் காலவரையறையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக எச்சரித்துள்ளனர் எனத் தெரிகிறது.

கடந்த வெள்ளியன்று ஒரு அடையாள வேலை நிறுத்தம் செய்த பட்டு நெசவாளர்கள், அரண்மனைத் தோட்டத்தில் நடைபெற்றப்பொதுக்கூட்டத்தில் கூடி, வேலை நிறுத்தம் பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றனர்.

பெயர்போன கும்பகோணம் பட்டுக்களை நெய்பவர்கள் சுமார் 14,000 பேர் உள்ளனர் எனத் தெரியவருகிறது.

37,000 தொழிலாளர்கள் பயன் பெறுவராம்!

சென்னை, அக். 9—

தொழிலாளருக்கான அரசாங்க இன்சூரன்ஸ் திட்டம் அக். 28-ந் தேதி முதல் மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி ஆகிய மூன்று பகுதிகளுக்கும் அமுலாக்கப்படுமெனத் தெரிகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் 90 தொழிற்சாலைகளில் வேலை செய்யும் 37,000 தொழிலாளர்கள் பயன்பெறக் கூடுமாம்.

'பெப்சு' மாநிலத்தில் நிலச் சீர்திருத்தம்

30 ஏக்கருக்கு மேல் எவரும் நிலம் வைத்துக்கொள்ளக்கூடாதாம்

பாடியாலா, அக். 8—

பெப்சு சட்டசபையில், சாகுபடியாளர், விவசாய நிலச் சட்டம் விவாதிக்கப்படவிருக்கிறது; இந்தச் சட்டத்தின்படி 30 ஏக்கருக்கு மேல் எவரும் வைத்துக்கொள்ளக் கூடாதாம்!

பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகள் மட்டும் 40 ஏகர் நிலம் வைத்துக்கொள்ளலாமாம்!

நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுக்கு மேல் யாரும் நிலம் வாங்க முடியாது

சர்க்கார் நிலங்கள், அறநிலைய நிலங்கள் முதலியவற்றை இந்தச் சட்டம் பாதிக்காதாம்.

வெள்ளத் தடுப்புத் திட்டம்

மாநிலங்களுக்கு மத்திய அமைச்சர் தகவல்

இலட்சுமணபுரி, அக். 9—

வெள்ளத் தடுப்புத் திட்டங்களைத் தமது சொந்த அமைப்புகள் மூலம் நிறைவேற்றுவதற்கு, இந்த நிதி ஆண்டில், மாநிலங்கள், முடிந்தவரை செலவு செய்யலாம் என்று மத்திய நீர்ப்பாசன அமைச்சர் குல்சாரிலால் நந்தா அறிவித்துள்ளார்.

ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 60 கோடி பற்றாக்குறையானாலும்கூட, அவசரமான திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்றும் அவர் உறுதியாகக் கூறியுள்ளார்.

புதிய அணு கடிகாரம்!

100-ஆண்டுகளுக்கு 3-வினாடிகள் மட்டுமே வித்தியாசப்படும்?

நியூயார்க், அக். 10—

100 ஆண்டுகளுக்கு 3 வினாடிகள் மட்டுமே வித்தியாசப்பட்டிருக்கும் எனக் கூறப்படுவதும், கப்பல் பிரயாணம், செய்திப் போக்கு-வரத்து, எஞ்சினீயரிங் முறைகளுக்கான 'டெலிஸ்கோப்' கணக்குகளைவிடச் சரியாக இருப்பதுமான ஒரு அணுக் கடிகாரம் தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

வானொலி நேர அறிவிப்புகள் இல்லாமலேயே முதல் தடவையாக சரியான நேரத்தையும், அதன் வெளியீட்டையும் இந்தக் கடிகாரம் அளிக்கின்றதாம்!

சென்னை சர்க்கார் பஸ் போக்குவரத்துத் தொழிலாளர்கள்

வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர்

சர்க்காருக்கு எச்சரிக்கை

சென்னை; அக். 9—

சென்னை சர்க்கார் பஸ் போக்குவரத்துத் தொழிலாளர்கள், சர்க்கார் அவர்களது கோரிக்கையை ஈடேற்றாவிட்டால் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் என்று எச்சரித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

தொழிலாளர் சங்கச் செயற்குழு அப்படி ஒரு முடிவை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

'சத்துள்ள உணவு தருவதற்குப் பதிலாக, தொழில் தேர்ச்சிபெற்றத் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ. 30-க்கு மேற்பட்டு சம்பளம் வாங்குவோருக்கு ரூ 20-ம், ரூ. 30-க்குக் குறைவாகச் சம்பளம் வாங்குவோருக்கு ரூ. 15-ம் 'படி'யாகத் தர வேண்டும்; ஒரு நாள் வேலை நேரத்தை ஒன்பது மணியிலிருந்து ஆறு மணியாகக் குறைக்கவேண்டும்—என்பன போன்றப் பல கோரிக்கைகளை தொழிலாளர்கள், நிர்வாகத்தினரிடம் தந்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.

பல்லாயிரம் மாணவர் வேலை நிறுத்தம்

பள்ளிக் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு

மாநில சர்க்கார் விதித்திருக்கிற சம்பள விகிதங்களுக்குக் கூடுதலாக 'மானேஜ்மெண்ட்' பள்ளிகளில் சம்பளம் வசூலிக்கப்படுவதை எதிர்த்து, பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் இங்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் எனத் தெரிய வருகிறது.

மாணவர்கள் சட்டசபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, சட்டசபைக் கட்டிடத்திற்கு அருகேயும் சென்று ஆர்ப்பாட்டம் செய்ய முனைந்தபோது, போலீசார் அவர்களைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றனர்.

நாகபுரி நகர சபைத் தலைவர், மாணவர்கள் சார்பில் மாநில கல்வி மந்திரியைச் சந்தித்து, மாணவர் வேலை நிறுத்தத்திற்கான காரணத்தை எடுத்துரைத்து, உடனடியான பரிகாரம் கோரியிருக்கிறார்.

காளி மார்க் சோடா நிர்வாகத்திற்கு...!

தொழிலாளர்கள் வேலை நிறுத்த முன்னறிவிப்பு

திருச்சி, அக். 9—

திருச்சி பழரச பானத்தயாரிப்பு பொதுத் தொழிலாளர் சங்கத்தின் பொது உறுப்பினர் கூட்டம் கடந்த 3-ந் தேதியன்று இரவு, அச்சங்க அலுவலகத்தில் திரு. ஏ. முஸ்தபா தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில், திருச்சி காளி மார்க் சோடா பாக்டரியில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அனைவருக்கும் போனசாக ஒரு மாதச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று நிர்வாகத்தினருக்கு 13-9-56-ல் கோரிக்கை அனுப்பியும், 26-9-56-ல் எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பியும் இதுவரை நிர்வாகத்தினர் தொழிலாளர்களின் கோரிக்கையில் தக்க கவனம் செலுத்தாத காரணத்தால், 23-10-56-க்கு மேல் வேலை நிறுத்தம் செய்வதென முடிவு செய்திருப்பதாக அந்தச் சங்கத்தின் செயலாளர் தோழர் எம். எஸ். மணி அறிவித்திருக்கிறார்.

அக்கூட்டத்தில், நெல்லை மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் படுகொலை செய்யப்பட்டமை குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

(ந. கி.)

நாடெங்கும் திராவிட நாடு பிரிவினை (விடுதலை) நாள் விழாக் கூட்டங்கள்

செப்டம்பர் திங்கள் 17-முதல் 23 வரை தி. மு. கழகக் கிளைகள், கழகத் தொடர்புடைய மன்றங்கள், படிப்பகங்கள் அனைத்தும் திராவிட நாடு பிரிவினை நாள் விழா கொண்டாடுமாறு பொதுச்செயலாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நாடெங்கிலும் கிளைக் கழகங்களும், கழகத் தொடர்புடைய நிறுவனங்களும் கொண்டாடியுள்ளன. இடமின்மையின் காரணமாகச் செய்திகள் அனைத்தும் சுருக்கித் தரப்பட்டிருக்கின்றன :—

அலசூர் (பெங்களூர்) :

16—9—56 காலை 10½ மணியளவில், அறிவு வளர்ச்சி மன்றத்தில் தோழர் தி. மு. குலசேகரன் தலைமையில் நடைபெற்றது. 'செப்டம்பர் 17' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசினர்.

சேலூர் :

17—9—56 மாலை 6 மணிக்கு, கழக மன்றத்தில் நடைபெற்றது. தோழர் எம். பி. கோவிந்தராசு கழகக் கொடியேற்றினர். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

* * *

21—9—56 இரவு 8 மணிக்கு, அழகிரி மன்றப் பணிமனையில், தோழர் எஸ் ஏ. கைலாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

அம்மயநாயக்கனூர் :

22—9—56ல், தோழர் இரா. பரமசிவம் தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மதுரை எஸ். முத்து, முகதா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கோவை 27-வது வட்டம் :

17—9—56ல் 27-வது வார்டு முத்தமிழ் மறுமலர்ச்சி மன்றச் சார்பில் தோழர் ஈ. த. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

குறிஞ்சிப்பாடி :

24—9—56 மாலை 6½ மணிக்கு, தோழர் பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. தோழர் க. அன்பழகன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

கிழப்பாவூர்

19—9—56 இரவு 8 மணிக்கு, பாண்டியன் மைதானத்தில் தோழர் ஜெ பி. மணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

மேலப்பாளையம்

16—9—56 இரவு 8 மணிக்கு. பசார் மைதானத்தில் தோழர் தெ. ந. ஆறுமுகம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஈ. வெ. கி. சம்பத், மற்றும் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

பீளமேடு

16—9—56 மாலை 6 மணிக்கு, புதூர் மாரியம்மன் திடலில் தோழர் ஏ. எஸ். முத்துநேசன் தலைமையில் நடைபெற்றது தோழியர் சத்தியவாணி-முத்து, மற்றும் பலர் உரையாற்றினர்.

சலகண்டபுரம்

20—9—56 மாலை 7 மணிக்கு திரு. வி. க. திடலில் தோழர் ப. கண்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. பி. சிற்றரசு மற்றும் பலர் பேசினர்.

வேலூர் (வ. ஆ.)

16—9—56-ல், நகர மண்டபத்தில் தோழர் அ. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது தோழர் ஏ. எல். சி. கிருட்டினசாமி, மற்றும் பலர் பேசினர்.

வெள்ளலூர்

17—9—56-ல், அண்ணா திடலில், தோழர் சங்கையன் கொடி ஏற்றினர். மாலை 6 மணிக்கு, சொருபராணி திடலில், தோழர் அற்புதசாமி தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது.

கீழ்வேளூர்

17—9—56-ல், தி. மு. கழக 8-வது ஆண்டு விழாவும் திராவிட நாடு பிரிவினை நாள் விழாவும் கொண்டாடப்பட்டது.

சுங்கரஹள்ளி

18—9—56-ல் ஊர்வலம் தாரை-தப்பட்டை, தீப்பந்த விளையாட்டு, கோல் விளையாட்டு ஆகிய நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது. தோழர் முனுசாமி கழகக் கொடி ஏற்றினர். விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

கருங்குளம்

19—9—56-ல், வ. உ. சி. திடலில், தோழர் மு. மதியரசு தலைமையில் நடைபெற்றது. தோழர் ஈ. வெ. கி. சம்பத், மற்றும் பலர் உரையாற்றினா.

கம்பாலாகில் (பம்பாய்)

17—9—56 இரவு 9½ மணிக்கு, கிளைக் கழகத் துவக்கவிழா தோழர் எஸ். தியாகராசன் தலைமையிலும், தோழர் கே. சுப்பையா தலைமையில் திராவிட நாடு பிரிவினை நாள் விழாவும் நடைபெற்றது. தோழர் சு. நவயுகன் கழகக் கொடியேற்றினர். தோழர் த. மு. பொற்கோ அண்ணா படத்தைத் திறந்துவைத்தார். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

தாராவி (பம்பாய்)

18—9—56ல் திராவிடரகத்தில் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். தோழர்கள் என். எஸ் கணேசன், எம். இராசாமணி ஆகியோர் இயக்கப் பாடல்கள் பாடினர். தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 1000 கொடுத்துதவ வேண்டுமென்றும், அந்த நிதி சேர்க்கும் விவரமும் கூறப்பட்டது.

பேரையூர்

16—9—56 மாலை 6½ மணிக்கு அரசமரத் திடலில், தோழர் கே. கே. முத்து தலைமையில் நடைபெற்றது தோழர் சி. பி. சிற்றரசு மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

உருளிக்கல் (வால்பாறை வட்டம்)

17—9—56ல் 1-வது வட்டத்தில் தோழர் வி மூக்காண்டி தலைமையில் கொடியேற்று விழாவும். ஊர்வலமும் நடைபெற்றது தோழர் பி. கே. விந்தன் கொடியேற்றினர். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

பூவாமேடு

17—9—56 காலை 9 மணிக்கு தோழர் சி. கண்ணுதுரை தலைமையில் கொடியேற்றுதலும், பகல். 1 மணிக்கு பொது மக்களுக்கு உணவு அளித்தலும், மாலை 4 மணிக்குப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உருவப்படத்துடன் ஊர்வலமும், இறுதியில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

வரகனேரி (திருச்சி) :

18—9—56ல், சென்டிரல் டாக்கீஸ் பின்புறமுள்ள திடலில் தோழர் வி. கே. முனுசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பழகன், அம்பில் தர்மலிங்கம் மற்றும் பலர் பேசினர்.

மூக்கூடல் :

17—9—56 இரவு 9 மணிக்கு, காந்தி திடலிலுள்ள பாண்டியனார் அரங்கில் தோழர் மு. வ. சூரியநாதன் தலைமையில் நடைபெற்றது தோழர் ஈ வெ. கி. சம்பத் மற்றும் பலர் பேசினர். அன்று பகலில், நகரில் பல இடங்களில் கழகக் கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன.

இந்து மத வெறியர் போக்கு!

தீண்டாமையை வளர்க்கப் பாடுபட்டாராம்

குவாலியர், அக். 8—

சபல்கார் பிரதேச இந்து மகா சபைச் செயலாளரான பகவன் லால் என்பார் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்ற தகவல் மத்திய பாரத் சட்டசபையில் தரப்பட்டிருக்கிறது.

சாதி இந்துக்களிடையே 'சாமர்' என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பற்றி இழிவான பிரச்சாரத்தில் அவர் ஈடுபட்டதாயும், தீண்டாமையை வளர்க்கப் பாடுபட்டதாயும் அவர் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறாராம்.

இந்தச் சம்பவத்தை ஒட்டி, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஏழு பெண்கள் சாதி இந்துக்களால் துன்புறுத்தப்பட்டனராம்.

வாக்குறுதி வீணாகாது !

சென்னை, அக். 9—

'மாநிலச் சீரமைப்பின் விளைவாக சென்னை மாநிலத்தில் சர்க்கார் ஊழியர்கள் எவரையும் வேலையிலிருந்து நீக்கவேண்டிய அவசியம் ஏற்படாது,' என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

தோழர் கே.வி.கே. சாமி படுகொலை

பூர்வாங்கக் குற்றப் பத்திரிகை தாக்கல்

தோழர் கே. வி. கே. சாமி படுகொலை செய்யப்பட்டதையொட்டி, போலீசார் கைது செய்துள்ளவர்களில், 11 பேர்கள் மீது தூத்துக்குடி சப்-மாஜிஸ்திரேட் மன்றத்தில் போலீசார் பூர்வாங்கக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

சந்தியாகு, பொன்னுசாமி, ஆத்தி, பெருமாள்(நாடார்) பெருமாள், தங்கப்பழம், வெங்கடாசலம், பொன்னையாநாடார், சித்திரவேலுத்தேவர் பாண்டியன், செகன்னாதன் ஆகிய 11 பேர் மீதும் தோழர் கே.வி.கே. சாமியைப் படுகொலை செய்ததாக இந்தியன் பினல் கோடு, 344-(1)-பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

தங்கப்பழம், தோழர் சாமியின் செல்வாக்கு வளருவதைக் கண்டு பொறாமை கொண்டதால், அவரைக் கொலை செய்யுமாறு இதரரை தூண்டியதாகப் பூர்வாங்கக் குற்றப் பத்திரிகையில் கூறப்பட்டிருக்கிறது.

'இவர்கள் அனைவர் மீதும் உள்ள வழக்கு சிக்கல் மிகுந்ததாயிருப்பதாலும், இன்னும் புலன் விசாரணை பூரணமடையவில்லை என்பதாலும், பல சாட்சிகள் இருப்பதாலும், இவர்களை ஜாமீனில் விடக்கூடாது என்று போலீசார் நீதிபதியிடம் கூறி, அவர்களை மேலும் 15 நாட்களுக்குக் காவலில் வைக்கவும் அனுமதி பெற்றுள்ளனர் எனத் தெரியவருகிறது.

மாவட்டத் தலைநகர்—பட்டணங்கள் அனைத்தும் !

விமானப் போக்குவரத்து வசதி பெறுமாம்

ஷிமோகா, அக். 9—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரமும் விமானப் போக்குவரத்து வசதி பெறும்படியாக ஏற்பாடு செய்யப்படும் என்றும், செய்திப் போக்குவரத்து மேலும் அபிவிருத்தியடைவதற்கு வழி செய்யப்படும் என்றும் உள்நாட்டிலாகாவில் மந்திரியாயுள்ள பி. என். தத்தார் இங்கு தனக்கு நகரசபையினர் தந்த விருந்து ஒன்றில் பேசும்போது கூறியுள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர் குறிப்பிட்டதாவது:—

"மல்நாடு பகுதி அபிவிருத்தித் துறையில் வெகுவாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது

"ஏராளமான இயற்கை வளமும், ஆண்டொன்றுக்கு ரூ. 90 - இலட்சம் வருமானம் தரும் காடுகளும் கொண்ட இப்பகுதி அலட்சியப்படுத்தப்படுவது சரியல்ல ; ஆனல், சரியான போக்குவரத்து வசதி இல்லாமை முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயுள்ளது ; எனவேதான், இதனைத் தவிர்ப்பதற்காக இரண்டாம் திட்ட காலத்தில், செய்திப் போக்குவரத்து வசதிகளை அதிகரிப்பதற்கென ஏராளமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

"இந்த மல்நாடு பிரதேச அபிவிருத்திக்கென ஒரு 'போர்டு' அமைக்கலாமென கருதுகிறேன்."

எல்லைத் தகராறு

டில்லியின் கொள்கை பற்றி சென்னை நிதி அமைச்சர்

சென்னை, அக். 9—

"சென்னை—ஆந்திரா எல்லைத் தகராறை மாநிலச் சீரமைப்பின் விளைவுகளில் ஒன்றாக இந்திய அரசாங்கம் கருதவில்லை; அதை தனி விவகாரமென்றே டில்லி கருதுகிறது; இதுதான் இந்திய சர்க்காரின் நிலை என்று நான் நினைக்கிறேன்" என்று. நிதி அமைச்சர் சுப்பிரமணியம் நிருபர்களிடம் கூறியுள்ளார்

'சமீபத்தில் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி ஸ்ரீமந் நாராயணன் தெரிவித்த கருத்து இந்திய அரசாங்கத்தின் கருத்தைப் பிரதிபலிக்கவில்லை' என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அப்படியா, சேதி!

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்குமாம் !

புதுடில்லி, அக். 9—

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தும்பொருட்டு மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கம் நடைமுறை நிதி ஆண்டில், ரூ. 3 கோடி உதவியளிக்குமென்று தெரிகிறது.

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் சம்பளம் மாநிலங்களுக்கிடையே வித்தியாசப்படுகிறது. எல்லா மாநிலங்களிலும் குறைந்தது மாதம் ரூ. 40 சம்பளம அவர்களுக்கு அளிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

இந்தத் திட்டத்தை அமுல் நடத்துவதால் மாநில அரசாங்கத்திற்கு ஏற்படும் கஷ்டத்தில் 50 சதவிகிதத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று கூறப்பட்டுள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 169 கோடி கல்வி அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 307 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அணுசக்தியிலிருந்து மின்சார விநியோகம்

லண்டன், அக். 8—

இங்கிலாந்தில் முதல் முறையாக அணுசக்தி மூலம் மின்சாரம் உபயோகிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1½ கோடி. பவுன் செலவில் அமைக்கப்பட்டுள்ள அணுசக்தி மின்சார நிலையத்திலிருந்து பிரிட்டனுக்குக் கூடியவிரைவில் மின்சாரம் கிடைக்கும்; தற்போது இந்த நிலையத்தில் 10,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது; விரைவில் இது இரட்டிப்பாக்கப்படும்.

சென்னை மாணவர் மன்ற போட்டிகள்—கால நீடிப்பு

காலாண்டுத் தேர்வு விடுமுறையை முன்னிட்டு, சென்னை மாணவர் மன்ற கதை, கட்டுரை, கவிதை, கையெழுத்து, ஓவியம் முதலிய போட்டிகளின் இறுதி நாள் இம்மாத இறுதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

விவரம் அறிய :—'மாணவர் மன்றம், 17, இரத்தின முதலி தெரு, சென்னை-1.'

★★

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப்பயணம்

★

அக்டோபர்			அக்டோபர்		
12 :	காஞ்சிபுரம்	.... காலை 9 மணி	18 :	மதுரை	.... காலை 9 மணி
,,	வேலூர்	.... மாலை 6 ,,	,,	விருதுநகர்	.... மாலை 6 ,,
13 :	திருப்பத்தூர்	.... காலை 9 ,,	19 :	திருநெல்வேலி	.... காலை 9 ,,
,,	கிருஷ்ணகிரி	.... மாலை 6 ,,	,,	நாகர்கோவில்	.... மாலை 6 ,,
14 :	சேலம்	.... காலை 9 ,,	20 :	ஓய்வு	
,,	ஈரோடு	.... மாலை 6 ,,	21 :	காரைக்குடி	.... மாலை 6 ,,
15 :	கோயமுத்தூர்	.... காலை 9 ,,	22 :	பட்டுக்கோட்டை	.... காலை 9 ,,
,,	உடுமலைப்பேட்டை	.... மாலை 6 ,,	,,	தஞ்சை	பிற்பகல் 3 ,,
16 :	கரூர்	.... காலை 9 ,,	,,	மாயவரம்	.... மாலை 6 ,,
,,	திருச்சி	.... மாலை 6 ,,	23 :	கடலூர்	.... காலை 9 ,,
17 :	திண்டுக்கல்	.... காலை 9 ,,			
,,	பெரியகுளம்	.... மாலை 6 ,,			

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்

தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் தெரிவிக்கக்கூடிய அந்தந்தத் தொகுதியிலுள்ள கிளைக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், அன்புகூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

'அறிவகம்' சென்னை
23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★

'பி. டி. ஐ. செய்தி நிறுவனத்தைப் பொது நிறுவனமாக்குக'

ஊழியர்கள் கோரிக்கை

கல்கத்தா, அக். 10—

"பி. டி. ஐ. என்ற செய்தி நிறுவனம், ஒரு பொது நிறுவனமாக மக்கள் சபைச் சட்டத்தின் மூலமோ, அல்லது குடியரசுத் தலைவரின் பிரகடனத்தின் மூலமோ மாற்றப்படவேண்டும்" என்று, அந்த நிறுவன ஊழியர்கள் கோரியிருக்கின்றனர்.

நிறுவன ஊழியர் சங்கங்களின் நான்காவது ஆண்டு மாநாடு கடந்த மூன்று தினங்களாக இங்கு நடைபெற்று முடிவுற்றுள்ளது. அங்குதான் இந்தக் கோரிக்கை தீர்மான ரூபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு தொழிலுக்கு ஒரே தொழில் சங்கம்

சென்னை அரசாங்கம் சட்டம் கொண்டு வருகிறது

சென்னை, அக். 11—

ஒரு தொழிலுக்கு ஒரே தொழிற் சங்கம் ஏற்படுத்துவதுபற்றி தொழிலாளர் பிரதிநிதிகளையும், முதலாளிகளையும் கலந்து ஆலோசித்த பின்னர் சட்டம் கொண்டுவருவதற்கு சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளது.

இந்தச் சட்டப்படி, பெரும்பான்மையான தொழிலாளர்களை உறுப்பினர்களாகப் பெற்ற சங்கத்தை மட்டுமே அரசாங்கம் அங்கீகரிக்கும்; அந்தச் சங்கத்துடன் மட்டுமே அரசாங்கமும், முதலாளிகளும் தொடர்பு வைத்துக் கொள்வர்.

பீடித் தொழிலாளரின் குறைகள் நீங்கும்?

தொழில் சட்டம் அமுலாகும்?

சென்னை, அக். 11—

பீடித் தொழிலாளர் பிரச்சினை பற்றி அரசாங்க அதிகாரி விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், அதை அரசாங்கம் பரிசீலித்து வருவதாகவும், விரைவில் பீடித் தொழிலாளர்களுக்கான தொழில் சட்டம் அமுலாக்கப்படும் என்றும் சென்னை அரசாங்கத் தொழில் அமைச்சர் பக்தவத்சலம், நேற்று நடைபெற்ற தொழிலாளர் — முதலாளிகள் — அரசாங்க அதிகாரிகள் மாநாட்டில் வெளிப்படுத்தினர்.

டாஞ்சியர் பகுதி மீது மொராக்கோ உரிமை

மேலை நாடுகளின் நோக்கத்திற்கு ரஷ்யா கண்டனம்

பாரிஸ், அக். 9—

இங்கு நடைபெற்ற ஒன்பது நாடுகளின் மாநாட்டில், டாஞ்சியர் மீது மொராக்கோவிற்கு உள்ள உரிமையை சோவியத் ரஷ்யா வற்புறுத்தியுள்ளது.

சர்வதேச ஆதிக்கத்தின்கீழ் டாஞ்சியர் பகுதி வரவேண்டும் என்ற நோக்கத்தின்மீது பாரிசில் நடைபெற்ற நான்கு வல்லரசுகளின் மாநாட்டில் இரஷ்யா கலந்துகொள்ளாததற்கு இதுவே காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது.

ரூர்கேலா எஃகுத் தொழிற்சாலை

150 பேர்களுக்குப் பயிற்சி

புதுடில்லி, அக். 8—

ரூர்கேலா எஃகுத் தொழிற்சாலையின் வேலைகளுக்குப் பயன்படுத்த 150 நபர்களுக்கு இரயில்வே போர்டு பயிற்சியளிக்கிறது; பயிற்சிகாலம் நான்கு மாதமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆச்சாரியார் போர்க்கோலம்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்ற தலைப்பில் பேசும்போது மேற்கண்டவாறெல்லாம் கூறிய ஆச்சாரியார், தொடர்ந்து குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவில் கல்வி அறிவு பெற்றுள்ள எல்லா மக்களுக்கும் தெரிந்த மொழி ஆங்கிலம். அவர்களுக்கு ஆங்கிலத்தில் உரையாடவும் எழுதவும் முடியும். எனவே எல்லோரையும் பிணைக்கக் கூடியதாக உள்ள இந்தப் பொது மொழியை நிர்வாகத்திலிருப்போர் பயன்படுத்திக் கொள்ள வேண்டாமா? இந்தியில்தான் காரியங்களைச் செய்யவேண்டும் என்று ஏன் நாம் கோரவேண்டும்? இந்தியில் காரியங்களைச் செய்வதானல் உ. பி. காரர்களால் சுலபமாக முடியும். வங்காளத்திலிருப்போராலோ, மராட்டியர்களாலோ முடியுமா?

"எனவே, இந்தியோடு சேர்த்து, ஆங்கிலமும் இந்தியாவின் அரசாங்க மொழியாக்கப்பட வேண்டும் என் பக்ஷ நீதியும் நேர்மையும் வற்புறுத்துகின்றன.

"இந்திய யூனியனின் எந்த ஒரு சட்டமும், இந்திய யூனியன் மக்களில் ஒரு சாராருக்கு அனுகூலமாயும், இன்னொரு சாராருக்குப் பிரதிகூலமாயும் அமையுமானல், அது ஒரு நியாயமான சட்டமாக இருக்கமுடியாது. எது நியாயமில்லையோ அதை ஒதுக்கித் தள்ளியாக வேண்டும்.

"ஜனநாயகத்தில் பெரும்பான்மையினரின் விருப்பம் நிறைவேற்றப்பட வேண்டியதுதான்; ஆனல் ஜனநாயக ஆட்சி என்பது, பெரும்பான்மை மக்களுக்கு மட்டுமல்ல; அது எல்லா மக்களுக்குமாகும். எனவே, சர்க்கார் பெரும்பான்மையினரின் சர்க்காராயிருந்தபோதிலும், அது எல்லா மக்களுக்குமாக இருக்கவேண்டுமே தவிர, பெரும்பான்மையினருக்காக மட்டும் இருத்தலாகாது."

தோட்டத் தொழிலாளர் சட்டத்தை அமுல்செய்ய...

ஐந்து அதிகாரிகள் நியமனம்

சென்னை, அக். 11—

தோட்டத் தொழிலாளர் சட்டத்தைச் சரிவர அமுல் நடத்த சென்னை அரசாங்கம் ஐந்து அதிகாரிகளை நியமித்துள்ளது.

அவர்கள், உதகமண்டலம், குன்னூர், பொள்ளாச்சி, ஏற்காடு, கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் தங்கி சட்டத்தை அமுல் நடத்தி வருவார்கள் என்று தொழில் அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்துள்ளார்.

டிக்கெட் இன்றிப் பிரயாணம் செய்வது

'நாட்டை ஏமாற்றுவதற்குச் சமமானதாகும்'

உதயபூர், அக். 9—

"இரயில்வேக்களில் 'டிக்கெட்' இன்றிப் பிரயாணம் செய்வது நாட்டை ஏமாற்றுவதற்குச் சமமானதாகும்,"

என்று, தலைவர் பிரசாத் இங்கு குறிப்பிட்டிருக்கிறார்.

'ஒவ்வொரு ஆண்டும், இரயில்வேக்களில் சுமார் ஒரு கோடி பேர் டிக்கெட் இன்றிப் பிரயாணம் செய்கிறார்கள்; அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ஒரு ரூபாய் வசூலிக்கப்பட்டாலும் ஒரு கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும்; அதைக்கொண்டு, இரயில்வே ஊழியர்களுக்கு பல வசதிகளைச் செய்து தர முடியும்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நெல்லை மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் ஆய்வுக் குழு

"19—10—56 வெள்ளிக்கிழமையன்று காலை 9 மணியளவில், தேர்தல் ஆய்வுக் குழுவினரை திருநெல்வேலி-பாளையங்கோட்டையில் திருச்செந்தூர் ரோடு முருகன் ஐஸ் பாக்டரி மாடியில் சந்தித்து, நெல்லை மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், கழக ஆர்வம்கொண்ட தோழர்கள் தங்கள் தங்கள் தொகுதி பற்றிய நிலவரங்களைச் சமர்ப்பித்துக் கருத்தறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

"ஆய்வுக் குழுவினரைச் சந்திக்கும் இடமான முருகன் ஐஸ் பாக்டரி, பாளையங்கோட்டை கிரைம் பிராஞ்ச் போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகே உள்ளது"

என்று, நெல்லை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் டபிள்யூ. டி. துரைசாமி அறிவிக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

திருச்சி:

திருச்சி டவுன் ஹாலில் 13-வது வட்ட தி. மு. கழகத் துவக்க விழா

14—10—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: எம். பி. முத்துக்கருப்பன்

பேசுபவர்: கி. மனோகரன்

அன்று காலை 10-மணிக்குக் கருணாநிதி பூங்காவில் கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும்.

★

கொடுவாயூர்:

12—10—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்: அருண்மொழி, ஏ. கே. வில்வம்

★

பாலக்காடு:

கோட்டை மைதானத்தில் 13—10—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்: அருண்மொழி, ஏ. கே. வில்வம்

★

உடுமலைப்பேட்டை:

12—10—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: வெ. காளியப்பன்

பேசுபவர்: ப. உ. சண்முகம்

தி. மு. கழகச் செயலாளர்களுக்கு

வேண்டுகோள்

வழக்கம்போல் 'திராவிடர் நாட்குறிப்பு' 1957-ம் ஆண்டுக்கும் வெளியிடப்படுகிறது. எல்லா தி. மு. கழகக் கிளைகளின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் பெயர்களையும், எந்த மாவட்டத்தைச் சேர்ந்தது என்ற விவரத்தையும் 25—10—56-க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதியனுப்புமாறு கிளைக்கழகச் செயலாளர்களையும் மாவட்டச் செயலாளர்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

காஞ்சி - மணிமொழியார்,
'போர் வாள்' அலுவலகம்,
147, பவழக்காரத் தெரு,
சென்னை-1

****

ஆய்வுக்குழு தங்கும் இடங்கள்

★

காஞ்சீபுரம்	.... நகராட்சி தங்கும் விடுதி (இரயில்வே ரோடு அருகில்)
வேலூர்	.... டவுன் ஹால்
திருப்பத்தூர்	.... 58, சின்னக்கடை வீதி
கிருஷ்ணகிரி	.... கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இல்லம் கோவாப்பரேடிவ் காலனி
சேலம்	.... சித்தேசுவரா சினிமா தியேட்டர்
ஈரோடு	.... கரூர் ரோட், வெங்கட நாய்க்கர் சத்திரம்
கோவை	.... முனிசிபல் வழிப்போக்கர் விடுதி (Travellers' Bungalow)
கரூர்	.... முனிசிபல் வழிப்போக்கர் விடுதி
திருச்சி	.... முனிசிபல் சத்திரம்
விருதுநகர்	.... முசாபரி பங்களா
திருநெல்வேலி	.... பாளையங்கோட்டை, திருச்செந்தூர் ரோடு முருகன் ஐஸ் பாக்டரி மாடி (கிரைம் பிராஞ்சு போலீஸ் ஸ்டேஷன் அருகில்)
நாகர்கோயில்	.... நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக அலுவலகம்
காரைக்குடி	.... 'இயூமன் காட்டேஜ்'--Human Cottage 5. முத்துப்பட்டிணம் 4-வது தெரு
பட்டுக்கோட்டை	.... காசாங்குளம் வடகரை சத்திரம் ஓய்வுவிடுதி
மாயூரம்	.... முனிசிபல் ஓய்வு விடுதி (மாயூரம் சந்திப்பு அருகில்)
கடலூர் N. T.	.... முசாபரி பங்களா

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

சென்னை சிம்சன் & குரூப் கம்பெனித் தொழிலாளர்கட்கு

"12-10-56 காலை 8-மணிக்கு சென்னை 29-வது வட்ட தி. மு. கழகக் கிளைப் பணிமனையில் (எண் 31, வாலர்ஸ் ரோட், சிந்தாதிரிப்பேட்டை), சிம்சன்—குரூப் கம்பெனித் தொழிலாளர்கள் சார்பில், தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்பது குறித்து ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெறும். தொழிலாளத் தோழர்கள், அனுதாபிகள் அனைவரும் தவறாது வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என்று, சென்னை 30-வதுவட்ட தி. மு. கழகச் செயலாளரும், சிம்சன் கம்பெனித் தொழிலாளருமான தோழர் தி. மணிவண்ணன் அறிவிக்கிறார்.

திண்டுக்கல் நகர தி. மு. கழகத் தோழர்கட்கு:

12-10-56 இரவு 10-மணிக்கு, திண்டுக்கல் கிராம முன்சீப் சந்து மிட்டாய் கம்பெனி இருந்த கட்டிடத்தில், மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து தலைமையில் நகரக் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

சென்னை-தூளை நகர இளைஞர்கழகம்

12—10—56 மாலை 6-30 மணிக்கு, டிமெலஸ் தெரு, குமாரசாமிராசாபுரத்தில், தோழர் சி. எம். பரிபூரணம் தலைமையில் 12-வது சுகாதார வாரம் நடைபெறும். தோழர்கள் சி. ஜி. எஸ். சுந்தரம், மா. சண்முகன் ஆகியோர் பேசுவர்.

திருமணங்கள்

12—10—56 காலை 8-30 மணிக்கு, சென்னை-மீர்சாகிப்பேட்டை வெங்கடாசல முதலி தெரு, எண் 137 இல்லத்தில், தோழர் எஸ். கோபால்—தோழியர் ஆண்டாள் திருமணம், தோழர் கா. அப்பாதுரையார் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் டி. வி. நாராயணசாமி, மு. புரட்சிமணி, கோ. இளவரசு, அலமேலு-அப்பாதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

13—10—56 காலை 10-மணியளவில், திண்டுக்கல் வட்டம் பொலியம்மனூரில், தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில், தோழர் திருமலைசாமி—தோழியர் சரோசினி; தோழர் இராமராசு—தோழியர் திருமலையம்மாள் ஆகியோரின் கலப்பு — சீர்திருத்த வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

சென்னை-மீர்சாகிப்பேட்டை வள்ளுவர் இலவச வாசகசாலை ஆண்டு விழா

12—10—56 மாலை 6-மணிக்கு, மேற்படி வாசகசாலையின் 6-ம் ஆண்டுவிழா சைவ முத்தையா முதலி 5-வது தெருவில் தோழர் மு. அரங்கநாதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கே. வி. கே. சாமி படிப்பகத் திறப்பு விழா

13—10—56 மாலை 5-மணிக்கு, சிறுவர்தாவூர் அடுத்தப் பஞ்சமாதேவியில் தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் கே. வி. கே. சாமி படிப்பகத்தைத் திறந்து வைப்பார். தோழர் ஜே. தருமாஞ்சுலு தலைமை தாங்குவார்.

விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., வி. கிருஷ்ணமூர்த்தி, வி. வரதராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பம்பாய்-அந்தேரி தி.மு.க. இல்லத் திறப்புவிழா

14—10—56 காலை 9-30 மணிக்கு, பம்பாய்-அந்தேரி தி. மு. கழக இல்லத் திறப்புவிழா மரோல் நாக்காவில் நடைபெறும். துவக்கி வைப்பவர்: எஸ். வேலன்; தலைவர்: எஸ். முத்து; வரவேற்பவர்: பி. கோவில்; கொடியேற்றுபவர்: எஸ். தியாகராசன்; கே. வி. கே. சாமி படத்திறப்பு: இரா. இரெத்தினசாமி; பேசுவோர்: த. மு. பொற்கொ, ஈ. முத்தையா, ஆ. செந்தமிழ்ச்செல்வன்.

கே. வி. கே. சாமி நினைவு தினப் பொதுக்கூட்டம்

13—10—56 இரவு 7-மணிக்கு, துறையூர் (கோவில்பட்டி) ஆறுமுகம் நினைவு அரங்கில், தோழர் வெ. திருப்பதி தலைமையில் மேற்படி பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் டபிள்யூ. டி. துரைசாமி, வெ. செல்லையா ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் (சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.